# இந்திப் புரட்டு.

## சர் K.V. ரெட்டி அறிக்கை.

(மொழிபெயர்ப்பு.)

## நமது விண்ணப்பம்.

('குடி அரசு' 3-7-38 தலையங்கம்)

---

இரண்டும் சேர்ந்து பிரசுரிக்கப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

---

வெளியிடுவோர்

குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

உண்மை விளக்கம் பிரஸ், ஈரோடு.

1938

விலை] [அரை அணா.

# நமது விண்ணப்பம்.

## 3—7—38 "குடி அரசு" எழுதுவது.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை ஒடுக்குவதற்காக வேண்டி "நமது" சுயராஜ்ய [பார்ப்பனீய] சர்க்கார் இதுவரை 120 பேர்களை அரஸ்ட் [கைது] செய்து சுமார் 40 பேர்கள் வரை கிரிமினல் அமெண்ட் மெண்ட் அக்ட் 7-1-எ படி 4-மாதம், 6-மாதம் கடினகாவல் சிட்சை கொடுத்துத் தண்டித்து, கேப்பைக்கூழும், களியும் போட்டு, மொட்டை அடித்து, ஜெயில் உடை கொடுத்து, குல்லாய் போட்டு வேலை வாங்கி வருகிறார்கள்.

மற்றும் தோழர்கள் சி. டி. நாயகம் [மாஜி டிப்டி ரிஜிஸ்ட்ரார்] ஈழத்து சிவானந்த அடிகள் பி. ஏ. [ஒரு சந்யாசி] கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ, பி. எல்., ஷண்முகானந்த சுவாமி (ஒரு சந்யாசி,) சி. என். அண்ணாதுரை எம். ஏ., (ரிவோல்ட் பத்திராதிபர்,) சுவாமி அருணகிரி நாதர் (ஒரு மடாதிபதி) முதலாகிய முக்கியஸ்தர்களை 3-வருஷம் வரை தண்டிக்கும் படியான இண்டியன் பினல் கோட் சட்டம் 117 பிரிவுப்படி கைது செய்து சிறைப் படுத்தி வைத்திருக்கிறார்கள். சிலர் ஜாமீனில் இருக்கிறார் கள் என்றாலும் இனியும் இந்த இரண்டு சட்டப்படியும் தினமும் 3 பேர், 4 பேர் வீதம் கைது செய்யப்பட்டுக் கொண்டும், தினமும் 10 பேர், 5 பேர் வீதம் தண்டிக்கப் பட்டுக்கொண்டும் வருகிறார்கள். "இந்த சுயராஜ்ய சர்க் கார் இந்தக் காரியங்கள் தானே செய்து வருகிறார்கள்.

இதற்குமேல் என்ன செய்து விடுவார்கள்?" என்று மக்கள் கருதி மேலும் மேலும் கைதியாக ஆயிரக்கணக்கான பேர்கள் முன் வந்து விடுவார்கள் போலிருக்கிறதே என்று எண்ணி "மதது" தோழர் சத்தியமூர்த்தியார் அவர்கள் தமது அறுப்புக்கோட்டை அரசியல் மகாநாட்டுத் தலைமைப் பிரசங்கத்தில் "இந்தியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்பவர்கள் பெரிய ராஜத்துரோகிகளாவார்கள்; ஆகையால் அவர்கள்மீது ஆயுள் பரியந்தம் அல்லது தூக்குப் போடும்படியான குற்றப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று மிக "தயாள" குணத்தோடு "இளகிய" மனம் கொண்டு பேசியிருக்கிறார்.

## "மெயில்" விளாசல்.

இப்படி இவர் எழுதியதை "மெயில்" பத்திரிகை மாத்திரமே கண்டித்துத் தலையங்கம் எழுதி இருக்கிறது

அதாவது தோழர் "சத்தியமூர்த்தியாரே! நீங்கள் இந்தியை எதிர்க்கிறவர்களுடைய தலைகளையெல்லாம் வெட்டவேண்டும் என்று சொல்லுகிறீர்களே! அப்படியானால் சென்னை கடற்கரையில் தோழர் ஈ. வெ. ராமசாமி பேசும்போது 50,000 ஐம்பது ஆயிரம் ஜனங்கள் கேட்டுக்கொண்டிருந்ததோடு தோழர் திருச்சி கே. ஏ. பி. விஸ்வநாதம் அவர்கள் சர்க்காரைக்கண்டித்து தீர்மானம் பிரேரேபித்ததற்கு அந்த 50,000 பேர்களும் ஏகமனதாய் ஓட்டுக்கொடுத்திருக்கிறார்களே! ஆதலால் இந்த 50,000 பேர்களுடைய தலைகளையும் தானே உமது அரசாங்கம் வெட்டியாக வேண்டும்! இது தானா உமது சுயராஜ்யம்? இது தானா காந்தியார் கூறும் "அன்பினால் ஆளப்படும் ராஜ்ய பாரம்?" என்று கேட்டிருக்கிறது. இதைத் தவிர

மற்ற எந்த பார்ப்பனப் பத்திரிகையும்—எந்த காங்கரஸ் பத்திரிகையும்—அதைப்பற்றி ஒரு வார்த்தைகூட பேச வில்லை என்பது மாத்திரமல்லாமல் அதைப்பற்றி இது வரை எந்த காங்கரஸ் தலைவர் என்பவர்களும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை என்றால் இன்றைய சுய ராஜ்யத்தில் தமிழ் மக்களின் தலை—உயிர் எவ்வளவு அற்பமாய் மதிக்கப்படுகின்றது என்பதற்கு வேறு அத் தாட்சி வேண்டுமா என்று கேட்கின்றோம்.

## ஆச்சாரியாருக்கு மூர்த்தியார் உதவி.

உண்மையில் தோழர் சத்தியமூர்த்திக்கும் கனம் ஆச் சாரியாருக்கும் ஒருவருக்கொருவர் தனிமையில் கண்டால் வெட்டிக்கொள்ளும்படியான அக்கிரமும் குரோதமும் இருந்து வருவது யாவரும் அறிந்ததாகும். அதாவது சத்தியமூர்த்தியாருக்குக் கிடைக்கவேண்டிய மந்திரி பதவி யை தோழர் ஆச்சாரியார் திடீரென்று திருச்சி டாக்டர் ராஜனுக்குக கொடுத்து விட்டதால் அன்று முதல் இன்று வரை ஆச்சாரியாரை மூர்த்தியார் வைத வண்ணமாகவும், அவர் மீது எதிர்ப்புப் பிரசாரம் செய்த வண்ணமாகவும் இருந்து வருகிறார். அப்படிப் பட்டவர் ஆச்சாரியாரின் இந்தி கட்டாய நுழைப்பும், எதிர்ப்பும் பார்ப்பனர், பார்ப் பனர் அல்லாதார் என்ற விஷயமாக இருந்து வருகிறது என்று தெரிந்தவுடன் இந்தியை எதிர்ப்பவர்களை ஆச்சாரி யார் 6 மாதமும், 3 வருஷமும் தண்டித்தால் போதும் என்று சொன்னால் தோழர் சத்தியமூர்த்தியார் இந்தியை எதிர்ப் பவர்களை ஆயுள்பரியந்தம் தண்டிக்க வேண்டும் அல்லது தலையை வெட்ட வேண்டும் [தூக்கில் போடவேண்டும்]

என்று பகிரங்கமாக ஒரு பொதுமேடையில் பேசி ஆச்சாரியாருக்கு உதவி செய்கிறார்.

## வேறு உதாரணம் வேண்டுமா?

100 க்கு 3 பேராய் உள்ள பார்ப்பனர்கள் மற்ற 100 க்கு 97 பேர்களாக உள்ள மக்களை எப்படி அடக்கி ஒடுக்கி அடிமைப்படுத்தி ஆதிக்கம் செலுத்த முடிகிறது என்பதற்கு இந்த ஒரு உதாரணம் போதாதா என்று கேட்கிறோம். பார்ப்பனர்கள் தங்கள் சமூக நலனுக்காக, என்றாலும், தங்கள் சமூக நலனுக்குக் குறைவு வருகிறது என்றாலும் உடனே கன்யாகுமரி முதல் இமயமலை வரை உள்ள சகல மாதிரியான பார்ப்பனரும் ஒன்று சேர்ந்து ஒரே அபிப்பிராயம் கொண்டுவிடுகிறார்கள். அவர்களில் யார் எவ்வளவு கொடுமையும் குற்றமும் செய்தாலும் ஒருவரையொருவர் சிறிதும் விட்டுக்கொடுக்காமல் ஆதரிக்கிறார்கள். எதிரிகள் மீது ஒரே மூச்சில் விஷமப் பிரசாரம் செய்து ஒழுக்க எக்கருமத்தையும் கையாளுகிறார்கள்.

அப்படி இருக்கும்போது அவர்கள் ஏன் மற்றவர்களை அடக்கி ஆளமுடியாது? ஆனால் பார்ப்பனரல்லாதாரிய குறிப்பாக தமிழ் நாட்டுத் தமிழ்மக்களோ இப்படிப்பட்ட சமயத்தில் தான் விபீஷணர்களாக மாறுகிறார்கள் என்பதற்கு இப்படிப்பட்ட கட்டுப்பாடாக-வன்மனமாகத்-தமிழ் மக்களை அடக்கி ஆதிக்கம் பெறுவதற்கென்றே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட பார்ப்பன ஆட்சிக்கு நமது தோழர் ராமநாதன் அவர்கள் மாட்டு வண்டி ஓட்டவும், அவர்களை நல்லவர் என்றும் நம் மக்களை அயோக்கியர்கள் என்றும் விளம்பரம் செய்யவுமான கேவலத் தொழிலுக்கு ஆளாகி

இருப்பதுடன் ஆச்சாரியாருக்குக் கோவில்கட்டி கும்பிட வேண்டும் என்று சொல்லவும் துணிந்துவிட்டார் என்றால் தமிழ் மக்களின் தாழ்ந்த அடிமை நிலைக்கு வேறு உதாரணம் வேண்டுமா என்று கேட்கின்றோம்.

## நமது மகிழ்ச்சி.

இவைகளைப்பற்றி எல்லாம் உண்மையிலேயே நாம் சிறிதும் கவலைப்படவில்லை. மிக்க உற்சாகமே கொண்டிருக்கின்றோம். அன்றியும் வெந்ததைத்தின்று வாயில் வந்ததைப்பேசிவிட்டு வீணே மூதுமைக்கும் நோய்க்கும் ஆளாகி நமக்கு இஷ்டமில்லாமல் சாவதைவிட இப்படிப் பட்ட ஏதாவது ஒரு சிறு காரியத்திற்காகவாவது அல்லது இம்மாதிரியான ஒரு சிறிய நன்மை உடைய காரியத்துக்கு ஆகவாவது வாழ்ந்து மறைவது அறிவுடைய காரியம் என்பதாகக் கருதி இருப்பதால் அதை நாம் வெகுநாளாக எதிர் பார்த்த காரியம் கை கூடிற்றென்ற மகிழ்ச்சியிலேயே இருக்கிறோம். அவ்வளவு மாத்திரம் தானா? அல்ல! அல்ல!! இந்நாட்டு உண்மைத் தமிழ் மக்களுக்கு அவர்களுடைய வீரத்தையும் தன் மானத்தையும் காட்டுவதற்கும் அவர்களது வாழ்வும் செல்வமும் உயிரும் நற்கருமத்துக்குப் பயன் படுத்தப்படுவதற்குமான ஒரு கிடைத்தற்கரிய அருஞ் சமயம் கிடைத்திருக்கிறதென்றும் மகிழ்ச்சி அடைகிறோம்.

## ஒரு கேள்வி.

தமிழர்களே! நீங்கள் எத்தனை மேதாவிகளானாலும், அறிவாளிகளானாலும், செல்வவான்களானாலும், மற்றும் யாராயிருந்தாலும் நீங்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு

நாளில் முடிவெய்தப் போவது திண்ணம். ஆனால் இந்த அறிவையும், மேதாவித் தன்மையையும் செல்வத்தையும் மற்றதையும் இப்பொழுது எதற்கு செலவழிக்கிறீர்கள்? பொய்ப் பெருமை தேடுவதிலும், பின்னால் என்ன ஆகப் போகிறதோ என்று கூட உங்களால் அறிந்து கொள்ள முடியாத காரியத்திற்காகப் பொருளைத் தேடிப்பெருக்கி வைப்பதிலும் பயன்படுத்துகிறீர்கள். மற்றும் இம்முயற்சியில் நீங்கள் எவ்வளவு ஏமாற்றம் அடைகிறீர்கள்? எவ்வளவு சங்கடம், கவலை, மனவேதனை, சரீரப் பிரயாசை அடைகிறீர்கள்? இவை மாத்திரமா? இந்தக் காரியங்களுக்கு நீங்களே உங்கள் வாழ்வில் மனமார எவ்வளவு பொய், வஞ்சகம், பித்தலாட்டம், பழிவாங்கும் உணர்ச்சி, ஆகிய காரியங்களில் ஈடுபட வேண்டியவர்களாக ஆகின்றீர்கள் என்பவற்றையும், நினைத்துப் பாருங்கள். ஆகவே மானம் வீரம், அறிவுபெற்ற மனிதன் தன் வகுப்பை மற்றொரு வஞ்சக அறிவுபெற்ற வகுப்பை சூறையாட அனுமதித்துக் கொண்டிருந்துவிட்டு மறைவது அறிவுடைமையா? என்பதை யோசித்துப் பாருங்கள். நீங்கள் எவ்வளவு செல்வவான்களாய் இருந்து செத்தால் தான் என்ன பயன்?

தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள இக்கொடிய நிலை இன்று நேற்று ஏற்பட்டதல்ல. இதை ஒழிக்க அழிக்க தமிழ் மக்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளும் இன்று நேற்று ஆரம்பிக்க பட்டவையல்ல. இவை இரண்டும் ஆயிரக்கணக்கான வருஷங்களாகவே இருக்கலாம் என்று சொல்லலாம். ஆனாலும் இன்றுதான் எதிரிகளின் கொடுமைகள் பாமர மக்களுக்கும் விளங்கும்படி வெளிச்சமேற்பட்டு வருகிறது. மனிதன் மானத்துக்கும் அறிவுக்கும் வாழவேண்டியவன் என்பது இன்றுதான் மக்களுக்கு

விளக்கிவைக்க முடிகிறது. ஆதலால் இச்சமயம் செய்யப் படும் எவ்வித முயற்சியும் பலன் படக்கூடியதாகும் என்ப தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## நமது தற்காலத் தேவை.

இன்று இக்கொடுமையில் இருந்து தப்புவதற்குத் தமிழ் மக்களுக்கு வேண்டியது முதலாவது ஒற்றுமையா கும். நிலைகுலைந்த தமிழ் மக்கள் முதலில் நிலை பெற வேண்டும்.

ஒன்று சேரவேண்டும்.

சில்லரை அபிப்பிராயபேதங்களை, அசூயை, பொறா மை ஆகியவைகளை விட்டு உடன்பிறப்பு (சகோதர) உணர்ச் சிகொள்ளவேண்டும்.

தங்கள் தங்கள் வாழ்க்கையில் எந்த பாகத்தை இந்த அருமையான முக்கியமான காரியத்துக்கு உதவலாம் என்று கவலை கொள்ள வேண்டும்.

தங்களிடம் சவுகரியமாக உள்ள செல்வத்தில் சிக்கன உணர்ச்சி இல்லாமல் எவ்வளவு அளிக்கலாம் என்பதை தாராளத் தன்மையோடு யோசித்து உதவ முன்வர வேண்டும்.

எதிரிகளின் கொடுங்கோன்மையை ஒழிக்க தங்கள் தங்களைப் பொறுத்தவரை எவ்வளவு தூரம் தியாகத்தைச் செய்யலாம் என்று நன்றாய்யோசித்து முடிவுக்கு வந்து வெளியில் புறப்பட்டுவிட வேண்டும்.

இத்யாதி காரியங்கள் செய்யாவிட்டால் இந்த 50 அல்லது 100 ஆண்டுகளுக்குள் தமிழ் மக்கள் அடைந்துள்ள சுதந்திரம், மானம், சமத்துவம், எல்லாம் நாசமாகி பழய (வருணதர்ம) நிலைக்குப்போய் சேர்ந்துவிடுவோம் என்பதை நன்றாக உணருங்கள்.

இது எவர்மீதும் கொண்ட விரோதமல்ல, குரோதமல்ல, ஹிம்சையல்ல, பலாத்காரமல்ல. நமது மனித உரிமையை நாம் பெற—காப்பாற்றிக்கொள்ள—முயற்சிக்கின்றோம். இம்முயற்சியிலும் யாரிடமும் துவேஷமும் காட்டுவதில்லை; யாரிடமும் பலாத்கார செய்கைக்கோ ஹிம்சையைத்தரும் செய்கைக்கோ நாம் செல்வதில்லை—செல்லும் படியாகவும் யாரையும் தூண்டவும் வரவில்லை. அன்றியும் அப்படிப்பட்ட காரியம் செய்யக்கூடாதென்றும் வன்மையாகக் கூறுகிறோம்.

## பணம்! பணம்!

தமிழ் மக்களே! இப்போது இந்த முயற்சிக்கு அவசரமாக, அவசியமாக வேண்டியது—பணம்—பணம்—பணமேயாகும். பணம் இல்லாவிட்டால் இம்முயற்சி உடனே செத்து மடிந்து நசுக்கப்பட்டு மறைந்தே போகும். பிறகு என்ன ஆகும் என்பதை நாம் சொல்ல வேண்டியதில்லை. ஒரு லட்ச ரூபாய் இருந்தால் தான் நாம் உண்மையில் ஒரு அளவு இக்கொடுமையில் இருந்து மீளலாம். கொடுமை என்றால் விளையாட்டுக் கொடுமையா? தமிழ் நாட்டில் உள்ள தமிழ் வீரர்கள் செல்வர்கள் மேதாவிகள் எல்லோரும் அடங்கி ஒடுங்கி நடைப்பிணங்களாக நடந்து திரியும்படி செய்யப்பட்டுவிட்ட கொடுமையாகும்.

உதாரணம் காட்டுகிறோம் பாருங்கள். தென்கோடியில் இருந்து எடுத்துக்கொள்ளுங்கள். திருநெல்வேலி ஜில்லாவில் தோழர்கள் மேடைதளவாய் குடும்பம், மிட்டாதார் ஈஸ்வரம் பிள்ளை குடும்பம், தூத்துக்குடி சிவ சின்னக் கண்ணு பிள்ளை குடும்பம் முதலிய 20, 30, 50 லட்சம் செல்வமும் பாரிஸ்டர் பி. ஏ., பி. எல்., முதலிய கல்வியும் பரம்பரை பெருமையும் மிட்டாவும் உள்ள குடும்பத்தார்கள் இன்று எவ்வளவு அடிமை நிலையில் அஞ்ஞாதவாசமாய் (தங்களைக்காட்டிக்கொள்ள முடியாத) நிலையில் இருக்கிறார்கள்.

## ராஜாக்கள், ஜமீன்தார்கள் எங்கே?

ராமநாதபுரம் ஜில்லாவில் ராமநாதபுரம் ராஜா எங்கே? சிவகங்கை ஜமீன் எங்கே? சேத்தூர் எங்கே? எட்டியாபுரம் எங்கே? கோடீஸ்வரர்களான செட்டி மக்கள் எங்கே? பத்து லக்ஷாதிபதி வியாபாரிகளான நாடார்குல பெரியார்களெங்கே? இவர்கள் நிலை இன்று எவ்வளவு அடிமைத்தனமாகவும், பரிதாபகரமானதாகவும் இருக்கிறது பாருங்கள்! மற்றும் மதுரை, ஜில்லாவில் உத்தமபாளையம் குடும்பம் எங்கே? போடி முதலிய ஜமீன்கள் எங்கே? பெரியகுளம் எங்கே? சுப்பஞ் செட்டியார் குடும்பம் எங்கே? மற்ற பல மிராசுதார்களும், வியாபாரிகளும், பி. ஏ., பி. எல்., எம். ஏ.க்களும் எங்கே? விலாசம் கூட அறியக் கூடாத அளவு மறைந்து கிடக்கிறார்களே? அதுபோல திருச்சி ஜில்லாவில் காட்டுப்புத்தூர், மீனாம்பள்ளி, உறையூர் ஜமீன்கள், கடவூர் சமஸ்தானங்கள் எங்கே? பத்து லக்ஷக்கணக்கான செல்வம் படைத்த முஸ்லிம் சௌகார்கள் எங்கே?

## தஞ்சைவாண்டையார், உடையார் வடபாதி எங்கே?

தஞ்சை ஜில்லாவில் வாண்டையார்கள், உடையார்கள் எங்கே? வடபாதி மங்கலம் எங்கே? சீர்காழியார் எங்கே? நெடும்பலம் எங்கே? இவர்கள் போன்ற மற்ற மேதாவிகளும் எங்கே? இதுபோலவே மற்ற சகல தமிழ் ஜில்லாக்களிலும் மற்றும் ஆந்திர மலையாள ஜில்லாக்களிலும் உள்ள மேதாவிகளும் செல்வவான்களும், ஜமீன்களும் ராஜதந்திர நிபுணர்களும் அடக்கப்பட்டு விட்டனரே! ஐயோ! இவை எதனால்? இந்நாடு ஏதாவது பொது உடமை — அல்லது சமதர்ம—நாடாக ஆகிவிட்டதா? சர்வாதிகாரக் கொடுங்கோன்மை நாடாகத் திகழ்கின்றதா? ஜனநாயக சுயராஜ்ய நாடென்றல்லவா சொல்லுகிறோம்! அதாவது

## இந்தி வேண்டாமென்றால் சிறையா?

"இந்தி படிக்க மாட்டேன்" என்றால் ஒருவர் 6-மீ கடினகாவல் போடச் சொல்லுகிறார், ஒருவர் 3-ஒரு போடச் சொல்லுகிறார், ஒருவர் தலையை வெட்டு என்கிறார், தொழிலாளிகள் தெருவில் திண்டாடி சோற்றிற்கு இல்லாமல் சொத்துப் பொத்தென்று மடிந்து விழுகிறார்கள். பசிக்குதே என்றால் ஒருவர் ஜெயில் என்கிறார். தட்டிக்கேட்டால் மற்றவர் சுடு என்கிறார். நாட்டு முன்னேற்றமோ ஆகாயக்கப்பலில் இருந்து கட்டை வண்டிக்கு வந்து விட்டது. பார்ச்மெண்டு பேப்பரில் இருந்து பனை ஓலைக்கு வந்து விட்டது. சல்லா வேஷ்டியிலிருந்து கோணிரட்டுக்கு வந்து விட்டது.

ஜாதி வித்தியாச ஒழிப்போ, கூட இருந்து சாப்பிட்டதற்கு கட்டிவைத்து உதைத்து மொட்டை அடித்துச் சாணிப்பால் உற்சவம் நடந்ததாக கூப்பாடுகள் வானத்தைப் பிளக்கின்றது. உத்தியோகமும் அதிகாரமும் ஒரு தனிச் சாதிக்குத்தான் உண்டென்று செய்து மற்றவர்கள் நினைக்கவே தகுதியற்றவர்களாக ஆக்கப்பட்டு விட்டார்கள்.

சமத்துவமோ சர்வ குண்டி தீர்த்தம்போல் வழங்கும் காப்பிக் கடையில் கூட சமத்துவம் கிடையாது. அங்கும் "பிராமணன்—சூத்திரன்" பலகை தொங்கிக்கொண்டு "பஞ்சமனும் பெரும் வியாதிக்காரனும் நாயும் உள்ளே பிரவேசிக்கக் கூடாது" என்கின்ற அறிவிப்புப் பலகை வெளியில் வைக்கப்பட்டும் இருக்கிறது.

## சமதர்ம ராஜ்யம் வந்துவிட்டதா?

மற்றும் பணக்கார ராஜ்யம் ஒழிந்து ஏழைகள் ராஜ்யமாக ஆக்கப்பட்டு விட்டது என்பதற்கு இவற்றை ஒரு ஆதாரமாகச் சொல்லப்படுமானால் அப்படியும் இல்லாமல் இன்று காலிகள், குண்டர்கள், இழிகுண இழிபிறப்பு மக்கள் என்று கல்லுப்போல் ருஜுவு செய்யக்கூடிய மக்கள் பலரைச் சேர்த்துக்கொண்டு அவர்களது ஆதரவில் யோக்கியர்கள், தகுதியுடைய மேதாவிகள், கண்ணியமுள்ள நாணயஸ்தர்கள் தூரத்தி அடிக்கப்பட்டு விட்டார்கள். இவைகளை என் சொல்லுகிறோமென்றால் இந்த நாட்டில் செல்வவான்கள், மேதாவிகள் அறிவாளிகள், ஒடுக்கப்பட்டார்கள் ஒழிக்கப்பட்டார்கள் என்று சொல்லுவதால் இவர் "சமதர்மம் ஏற்பட்டுவிட்டது" என்று சொ

ல்லி ஏமாற்ற வருவார்களோ என்னவோ என்று கருதி அந்த யோக்கியதையையும் மக்கள உணரட்டும் என்பதற்கு எடுத்துக் காட்டுகிறோம்.

## இன்னும் புத்தி வரவில்லையே!

இந்தக் காரியங்களைப் பற்றியெல்லாம் எவ்வளவு தான் உணர்ந்தாலும் நம் நாட்டு செல்வவான்களில் பலருக்குச் சுலபத்தில் தன்மான உணர்ச்சிவாராது என்பதுநமக்குத் தெரியும். ஏன் என்றால் இவ்வளவு இழிநிலை தங்களுக்கு ஏற்பட்டும் இன்னமும் பல செல்வவான்கள் தங்களுடையவும், தங்கள் சமூகத்தினுடையவும் எதிரிகளின் காலை “மோக்ஷத்”திற்கு ஆகவும், பதவி வாழ்வுக்காகவும் நக்கிக் கொண்டு திரிகிறார்கள். நக்க தூது அனுப்புகிறார்கள்.

தமிழ் வக்கீல்களோ அவர்கள் பலருடைய அகராதியில் மானம் மனிதத்தனம் என்கின்ற வார்த்தைகளே கிடையாது என்று சொல்லலாம்.

ஆதலால் சாதாரண நடுநிலையிலுள்ள தமிழ் மக்களே, தங்கள் சமூகத்துக்கு நேர்ந்த இந்த ஆபத்திலிருந்து தப்புவிக்க உதவி செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இந்நாட்டு தமிழ் வாலிபர்களே அடக்கு முறை ஆயுதத்தை மழுங்கச் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

இந்நாட்டுத் தமிழ் பெண்மணிகளே இவ்விரு கூட்டத்திற்கும் உற்சாக மூட்டக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

வெளிநாட்டில் உள்ள 'இந்து' முஸ்லிம் தமிழ் மக்களே இம்முயற்சிக்குதவி அளித்து இந்நாட்டுப்பணக்காரர்களுக்கு புத்தியும், மானமும் ஏற்படுத்தி தாராளமாய் உதவச்செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

ஆதாலால் மேற்கூறிய ஒவ்வொரு தமிழ் மகனும் தமிழ் மகளும் இது சமயம் தைரியமாய் வெளிவந்து தன் தன் கடமையைச் செய்து தமிழ் நாட்டை உலகத்தில் இல்லாவிட்டாலும், பூகோள படத்திலாவது உருவிருக்கச் செய்வார்களாக.

---

# இந்திப் புரட்டு.

## ஸர். கே. வி. ரெட்டி நாயுடு விளக்கம்.

சென்னை முதன் மந்திரியாரின் இந்தி கட்டாய பாடத்தைக் கண்டித்து ஸர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்கள் எழுதுவதாவது:—

காங்கிரஸ்காரர் பதவியேற்று ஒரு மாதம் முடியு முன்னே சென்னை மாகாணப் பள்ளிக்கூடங்களில் இந்தியைக் கட்டாய பாடமாக்கப் போவதாக முதன் மந்திரியார் தெரிவித்தார்.

உடனே அதைப் பலர் கண்டிக்கத் தொடங்கினார்கள்.

ஆகவே 1937 ஏப்ரல் 13-ந்தேதி சென்னை மாகாணக் கல்லூரி ஐக்கிய சங்க ஆதரவில் கூடிய ஒரு பொதுக் கூட்டத்தில் கட்டாய இந்தியை ஆதரித்து கனம் ஆச்சாரியார் பேசும்படி நேர்ந்தது.

அப்பால் 1937 ஆகஸ்டு 15-ந்தேதி முத்தியாலு பேட்டை ஹைஸ்கூல் ஆந்திர பர்ஷாபிவிர்த்தி சங்கச்சார்பில் கூடிய ஒரு கூட்டத்தில் நான் கனம் ஆச்சாரியாரின் இந்தி கட்டாய பாடத்தை எதிர்த்துப் பேசினேன்.

மற்றும் பல பிரபலஸ்தர்கள் கண்டிக்க முன் வந்தார்கள்.

அவர்களுள் முக்கியஸ்தர் தோழர் சோமசுந்தர பாரதியார். அவரும் ஒரு காங்கிரஸ்காரரே. அவர் கனம் முதன் மந்திரிக்கு பகிரங்கக் கடிதமும் எழுதினார்.

1937 ஆகஸ்டு மாத வாக்கில் திருச்சி, தஞ்சாவூர், சேலம் முதலிய இடங்களில் கூடிய பொதுக் கூட்டங்களி லும் இந்தி கட்டாயபாடத் திட்டம் கண்டிக்கப்பட்டது.

இந்தியை கட்டாய பாடமாக்கினால் முஸ்லிம்கள் காங் கரசிலிருந்து விலகி விடுவார்கள் என சென்னை அஞ்சுமனே ஐ. ஹசேபினி சங்கம் போன்ற பொது ஸ்தாபனங்களும் எச்சரிக்கை செய்தன.

மாகாணம் முழுதும் சுற்றுப்பிரயாணம் செய்த மந்திரி களும் இந்தி எதிர்ப்பின் வன்மையை உணர்ந்து கொண் டார்கள்.

## காங்கரஸ்காரர் எதிர்ப்பு.

தியாகராயர் இந்திப்பிரசார சபைச் சதுக்கத்தில் கிருஷ்ணன் பண்டாலை இந்திப்பிரசாரகர் பயிற்சிப் பள்ளிக் கூடத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டக்கூடிய கூட்டத்தில் காங்கரஸ்காரரே இந்தி கட்டாய பாடத்தைக் கண்டித்து முதன் மந்திரியாரிடம் கேள்விகள் கேட்கத் தொடங்கி னார்கள்.

எதிர் அபிப்பிராயங்களை கனம் முதன் மந்திரி அலக்ஷ்யம் செய்யவே 1938 பிப்ரவரியில் காஞ்சிவரத்தில் ஒரு இந்தி எதிர்ப்பாளர் மகாநாடு கூட்டப்பட்டது. அம் மகாநாட்டுக்கு நானே தலைமை வகித்தேன்.

அதைத்தொடர்ந்து அநேக இடங்களில் அநேக கண் டனக் கூட்டங்கள் நடைபெற்றன.

## எதிர்ப்பாளர் துணிவு.

எதிரிகள் அபிப்பிராயம் மீண்டும் கட்டுப்பாடாக அலக்ஷ் யம் செய்யப்படவே எதிர்ப்பாளர்கள் கறுப்புக்கொடி பிடிக்

கவும் மறியல் கிடக்கவும் உண்ணா நோன்பிருக்கவும் துணிவு கொண்டார்கள்.

எதிர்ப்புத் தோன்றி வெகு நாட்களுக்குப் பிறகு—இந்தி கட்டாய பாடத் திட்டம் அமலுக்கும் வந்த பிறகு—கனம் முதன் மந்திரியார் பத்திரிகை நிருபருக்குப் பேட்டியளிக்கவும், மறுநாள் ஒரு சர்க்கார் அறிக்கை வெளியிடவும் கருணை கூர்ந்து முன் வந்தார்.

ஜூன் 9ந் தேதி வெளிவந்த பேட்டி வரலாறும், 10ந் தேதி வெளிவந்த சர்க்கார் அறிக்கையும் மிகவும் வேடிக்கையாக இருக்கின்றன. எதிரிகள் ஆட்சேபணைகளுக்குத் திருப்தியளிக்கும் அம்சம் அவற்றுள் ஒன்று கூட இல்லை.

கட்டாய இந்திபாடத் திட்டத்துக்கு ஆதாரவாக அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ள காரணங்களை ஆராய்ந்து பார்ப்போம்.

## கட்டாய இந்திக்குக் காரணங்கள்.

1. இந்தியால் தமிழ் அழியுமா அழியாதா என்பது முக்கிய பிரச்சினையல்ல; ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சர்க்காருக்கு மாகாணத்திலுள்ள சிறுவர்களுக்கு தாராளக் கல்வியளிக்க அதிகாரமுண்டா? இல்லையா? என்பதே முக்கியமான, பிரச்சினை என கனம் ஆச்சாரியார் கூறுகிறார்.

முதன் மந்திரியார் அபிப்பிராயப்படி இந்தியின்றி எந்தக் கல்வித்திட்டமும் தாராளப் போக்குடைய திட்டமாகாதாம்.

ஆகவே தாராளக் கல்வி என்பதற்கு கனம் முதன் மந்திரியார் என்ன பொருள் கொண்டிருக்கிறார் என்பதை அறிவது கஷ்டமாக இருக்கிறது.

தாராளக் கல்வி யென்பது இலக்கிய கல்வியென்றே சாதாரணமாகப் பொருள் கொள்ளப்படுகிறது.

ஆல்டஸ் ஹக்ஸிலி என்ற கல்வி நிபுணர் கூறுவதை கவனிப்போம்.

“தற்காலக் கல்வி இலக்கியக் கல்வி—தொழிற் கல்வி என இரண்டு பெரும் பிரிவாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

மக்களின் மனோபாவத்தை விருத்திசெய்து அறிவை விசாலப் படுத்துவதே இலக்கியக் கல்வியின் முதல்நோக்கம்.

சரித்திரம், தர்க்கம், மனோதத்துவம், ரஸாயனம், உயிர் நூல் முதலிய விஷயங்களில் ஏகதேச அறிவைக் கொடுத்து மக்களை உயர்தர வாழ்வுக்கு லாயக்காக்குவது இரண்டாவது நோக்கம்.

பிரதிதின வாழ்வுக்குரிய தொழில் அறிவை விருத்தி செய்து ஜீவனத்துக்கு வழி வகுப்பது தொழிற் கல்வியின் நோக்கம்.”

## தாராளக் கல்விக்கு இந்தி அவசியமா?

கல்வி நிபுணர் ஆல்டஸ் ஹக்ஸிலியன் இந்த அபிப் பிராயங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு பார்த்தால் தாராளக் கல்விக்கு இந்தி அவசியமில்லை என்பது விளங்கி விடும்.

முதன் மந்திரியார் அபிப்பிராயத்துக்கு ஆதாவளிக்கும் எந்தக் கல்வி நிபுணரையும் நான் இதுவரைப் பார்த்ததே இல்லை.

2. சர்க்கார் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தாரா ளக் கல்விக்கு இந்தி இன்றியமைடாதது எனக் குறிப்பிடப் படவுமில்லை.

இந்திய தேசியவாழ்வில் நமது மாகாணத்துக்கு அதன் அந்தஸ்துக்குரிய கண்ணியமான ஸ்தானம் பெறுவதற்கு இந்தி இன்றியமையாதது என்றே குறிப்பிடப் பட்டிருக் கிறது.

அந்த அறிக்கையை வெளியிட்ட விளம்பர மந்திரியார் தாராளக் கல்விக்கு இந்தி அவசியமில்லை யெனவே நினைத்திருக்கிறார்போல் தோற்றுகிறது.

எனவே இந்தியைக் கட்டாயபாடமாக்குவதின் நோக் கம் அரசியல் சம்பந்தமானதே.

அப்படிப் பார்த்தாலும் கனம் ஆச்சாரியார் திட்டப் படியுள்ள சொற்ப இந்திப்படிப்பினால் இந்திய தேசிய வாழ்வில் சென்னை மாகாணத்தின் அந்தஸ்துக்குரிய ஸ்தா னத்தை சென்னை மாகாணம் எப்படிப் பெற்றுவிடுமென் பது விளங்கவில்லை.

இந்த மாகாணத்திலே ஆயிரக்கணக்கான முஸ்லிம் சிறுவர்கள் உருது படித்திருக்கிறார்கள்.

அவர்களது உருது அறிவு இந்தியத் தேசிய வாழ்வில் அவர்களுக்குரிய ஸ்தானத்தை அளித்திருக்கிறதா?

## முடுமந்திரம் ஏன்?

அது எப்படியானாலும் ஆகட்டும், இந்தி கட்டாயப் பாடத்துக்கு இதுவரை கூறப்பட்டுவந்த இரண்டு அரசியல்

சார்பான காரணங்கள் சர்க்கார் அறிக்கையிலோ முதன் மந்திரியார் பேட்டி வாலாற்றிலோ விளக்கப்படவேயில்லை.

இந்திய ஐக்யத்துக்கு ஒரு பொதுமொழி தேவையென்பதும் இந்திய பூரண சுயராஜ்யத்துக்கு ஒரு அகில இந்தியப் பொதுமொழி இன்றியமையாதது என்பதுமே இதுவரை கூறப்பட்டு வந்த இரண்டு அரசியல் காரணங்கள்.

இந்தி வேண்டாமென்பவர்கள் இந்த இரண்டு காரணங்களையும் வன்மையாக எதிர்த்திருக்கிறார்கள்.

கானடா, தென்னாப்பிரிக்கா, ஸ்விட்சர்லாந்து நிலைமைகளை முன்னிறுத்திப் பார்த்தால் தேசவிடுதலைக்கு ஒரு பொதுமொழி அவசியமில்லையென்பதும், இந்திய நிலைமைக்கு ஒரு பொதுமொழி சாத்தியமானதல்லவென்பதும் நன்கு விளங்கும்.

இந்த இரண்டு காரணங்களையும் அறிக்கையில் சர்க்கார் விளக்கிக் கூறாமலிருக்கக் காரணமென்ன?

தேச விடுதலைக்கும் தேசிய ஒற்றுமைக்கும் ஒரு பொது மொழி அவசியமில்லையென காங்கரஸ் சர்க்கார் ஒப்புக்கொண்டு விட்டார்களா?

அப்படியானால் இந்தி எதிர்ப்பாளர் தமது கிளர்ச்சியின் வலிமையினால் காங்கரஸ் மந்திரிகளிடமிருந்து ஒரு சலுகை பெற்றுவிட்டார்கள் என்றே சொல்லவேண்டும்.

## காங்கரஸ் மனோபாவம் என்ன?

எனினும் சர்க்கார் அறிக்கையில் "தேசிய வாழ்வு" என்ற சொற்றொடர் அடங்கியிருப்பதினால் காங்கரஸ்

மந்திரிகளின் மனோபாவம் இன்னதென உணரமுடியாமலே இருக்கிறது.

இருந்தாலும் சில காங்கரஸ் மந்திரிகளும், பார்லிமென்டரி காரியதரிசிகளும் ஒரு பொது மொழிபற்றியும், ஒரு தேசிய மொழி பற்றியும் ஓயாமல் புலம்பிக்கொண்டே இருக்கிறார்கள்.

3. மந்திரியின் பேட்டி வரலாற்றிலும் சர்க்கார் வெளியிட்ட அறிக்கையிலும் இந்தியாவில் அதிக மாகாணங்களில் பேசப்படும் பாஷை இந்துஸ்தானி எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆனால் இதற்கு ஆதாரமில்லையென பல முறை மறுக்கப்பட்டிருக்கிறது; மறுப்பு தப்பென இதுவரை நிரூபிக்கப்படவுமில்லை.

கவிச் சக்கரவர்த்தி டாக்டர் ரவீந்திரநாத் தாகூரைப் போஷகராகக் கொண்ட கல்கத்தா 'ரபிபஜார்' இலக்கிய சங்கத்தார் அக்கூற்று பொய்யானதென நிரூபித்து இருக்கிறார்கள்.

'ரபிபஜார்' இலக்கிய சங்கம் பல பெரிய வங்கப் பண்டிதர்களை அங்கத்தவர்களாகக் கொண்டது.

## வங்காளிகள் அபிப்பிராயம்.

இந்தியைப் பற்றி 'ரபிபஜார்' இலக்கிய சங்கத்தில் சமீபத்தில் விவாதம் நடந்தபோது 'ஆனந்த பஜார்' பத்திராசிரியர்களில் ஒருவரான பிரபுல்லா சர்க்கார், வங்காளி 8 கோடிமக்களால் பேசப்படுகிறதென்றும், இந்தி 11 கோடி

மக்களால் பேசப்படுவதாய்க் கூறப்படுவதற்கு ஆதாரமில்லை யென்றும் கூறினார்.

இலக்கண இலக்கியங்கள் இல்லாத அநேக விருத்தி யடையாத பாஷைகளையும் இந்தியுடன் சேர்த்து இந்தி பக்தர்கள் புரளி செய்கிறார்களாம்.

இலக்கண இலக்கியங்கள் இல்லாத அனேக விருத்தி யடையாத பாஷைகளையும் இந்தியுடன் சேர்த்துஇந்தி பக்தர்கள் புரளி செய்கிறார்களாம்.

இந்தச்சலுகை வங்காளிபாஷைக்கும் காட்டப்பட்டால் வங்காளி பேசுவோர் இந்தி பேசுவோரைவிட அதிக மாக வே இருப்பார்கள்.

இந்தியாவின் மிகுதியான பாகங்களில் இந்தி பேசுவோர் வசித்து வருவதாகக் கூறப்படுவது தப்பென்றும் ஆசாம், ஒரிஸா, பம்பாய், அஜ்மீர், மீர்வாரா, பலூச்சிஸ்தானம், சென்னை, பரோடா, கொச்சி, ஹைதராபாத், வட மேற்கு எல்லைப்புறமாகாணம், பாஞ்சாலம், காஷ்மீரம், மைசூர், ராஜபுதனம், கூர்ஜரம், திருவிதாங்கூர் முதலிய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு இந்தி தாய்மொழியுமல்ல; உபமொழியுமல்ல எனவும் “விசித்ரா” பத்திரிகையின் ஆசிரியரான உபேந்திரநாத கங்கூலி தக்க ஆதாரங்களுடன் விளக்கிக் கூறியிருக்கிறார்.

ஆகவே இந்தியை தேசியப் பொது மொழியாக்க இந்திய தேசீய காங்கரசும் இந்தி பேசும் வகுப்பாரும் முயற்சி செய்வதை “ராபிபஜார்” சங்கத்தார் எதிர்ப்பதும் இந்தி எதிர்ப்புக்கு இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் வசிக்கும் வங்காளி பேசும் ஹிந்துக்களும், முஸ்லீம்களும், கிறிஸ்த

வர்களும் ஆதரவளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதும் ஆச்சரியமானதல்ல.

ஆகவே இந்தியே அதிகப்படியான இந்தியர்களால் பேசப்படும் பாஷை என்பது ஆதாரமற்ற பேச்செனத் தெளிவாகி விட்டது.

4. முதன் மந்திரி, பத்திரிகை நிருபருக்கு அளித்த பேட்டியின்போது "தமிழ் முதலிய பாஷைகள் மட்டும் கற்பிக்கப்படும் ஆரம்பப் பாடசாலைகளில் இந்தி கட்டாய பாடமாக்கப்பட மாட்டாது" எனக் கூறியிருக்கிறார்.

அதுபோலவே "ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் தாய் மொழி மட்டுமே கற்பிக்கப்பட்டு வருவதினால் ஹிந்துஸ்தானி பாடம் ஏற்படுத்தப்படமாட்டா தென்று" சர்க்கார் அறிக்கையும் கூறுகிறது.

ஹிந்துஸ்தானி ஒன்று இரண்டு மூன்றாவது பாரங்களில் தான் கற்பிக்கப்படுமாம்.

ஆகவே கீழ்த்தர—உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் இங்கிலீஷ் விருப்ப பாடமாகக்கூட கற்பிக்கப்பட மாட்டாதென விளங்குகிறது.

கீழ்த்தர—உயர்தரப் பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் கற்பிக்கப் பட்டால்தான் மாணவர்கள் ஹைஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் சேர்ந்து படிக்கமுடியும்.

இப்பொழுது அநேக உயர்தர ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் இங்கிலீஷ் கற்பிக்கப்படுகிறது.

அந்த வகுப்புகளில் படிக்கும் கிராம வாசிகளான மாணவர்கள் நகரங்களுக்குச் சென்று மூன்றாவது நான்காவது பாரங்களில் சேர்ந்து படித்து வருகிறார்கள்.

## இங்கிலீஷ் இஸ்டபாடமும் இல்லையா?

தாய்மொழி மட்டும் கீழ்த்தர—உயர்தரப் பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்பட்டு வந்தால் ஆங்கிலம் கற்க அப்பள்ளிக்கூட மாணவர்களுக்கு வசதியில்லாமலாகிவிடும்.

ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் பெரும்பாலும் கிராமங்களிலேயே இருந்து வருவதினால் கிராம மாணவர்கள் இங்கிலீஷ் கற்க முடியாமல் கஷ்டப்படுவார்கள்.

பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் சம்பந்தம் இருந்து வரும்வரை கண்ணியமான ஜீவனம் நடத்த ஆங்கிலப் படிப்பு இன்றியமையாததாகவே இருந்துகொண்டிருக்கும்.

(5) எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் தாய்மொழி மூலமே கல்வி கற்பிக்கப்படுமென்றும், தமிழில் நல்ல பாண்டித்தியம்இருக்கும் முறையில் போதனை அளிக்கப்படுமென்றும் அதற்கு அறிகுறியாக எஸ். எஸ். எல். சி. சட்டம் திருத்தப்படப் போவதாயும் பேட்டி வரலாறும் சர்க்கார் அறிக்கையும் கூறுகிறது.

இந்தச் சலுகைகளுக்காக மாகாண மக்கள் காங்கரஸ் சர்க்காருக்கு நன்றிபாராட்ட வேண்டியதுதான். தமது கிளர்ச்சி மூலம் இந்தச் சலுகைகளை காங்கரஸ் சர்க்காரிடம் இருந்து பெற்ற இந்தி எதிர்ப்புக்காரர் இதற்காகப் பெருமை பாராட்டிக்கொள்ளவும் உரிமையுண்டு.

ஏனெனில் எதிர்ப்பாளர் கிளர்ச்சி செய்யும்முன் இந்தக் கல்வி சீர்திருத்தங்கள்பற்றி பிரஸ்தாபிக்கப்படவே இல்லை.

ஆனால் இந்தச் சலுகை இந்தி கட்டாய பாடத்தை அமலுக்குக் கொண்டுவருவதற்குள்ள சூழ்ச்சியே அன்றி வேறல்ல.

இந்தி அல்லது இந்துஸ்தானியை உருது அல்லது நாகரி லிபிமூலம் கற்றுக் கொள்ளலாம் என்பது காங்கரஸ் சர்க்கார் அளித்திருக்கும் இரண்டாவது சலுகை.

இது முஸ்லிம்களைப் பிடிக்கும் தூண்டிலாகும்.

இந்த உபாயத்தினால் இந்தி கட்டாய பாடத்தை முஸ்லிம்கள் ஆதரிக்கும்படி செய்துவிடலாமென காங்கரஸ் சர்க்கார் மனப்பால் குடிக்கிறார்கள்.

## முஸ்லிம்களை ஏய்க்க முடியாது.

அப்படியானால் காங்கரஸ் சர்க்கார் ஏமாந்து போவார்கள் என்பது நிச்சயம்.

எவரும் வேண்டாத இந்த இந்துஸ்தானி வகுப்புகளுக்கு தமது குழந்தைகளையனுப்ப முஸ்லிம்கள் ஒரு பொழுதும் இணங்க மாட்டார்கள்.

ஆனால் 'இந்தி' 'இந்தி' எனக் கத்திக் கொண்டிருந்த காங்கரஸ்காரர் திடீரென "இந்துஸ்தானி" "இந்துஸ்தானி" எனக் கூச்சல் போடக் காரணமென்ன?

இந்தியைக் கட்டாய பாடமாக்கப் போவதாகவே காங்கரஸ் மந்திரிகள் பிரசாரம் செய்து வந்தார்கள்.

சென்ற பட்ஜெட் விவாதத்தின் போதுதான் முதன் மந்திரியார் இந்துஸ்தானி எனக்கூறியதை நான் முதன் முதலில் கேட்டேன்.

இது முஸ்லிம்களைப் பிடிப்பதற்கு வீசிய வலை தானே?

7. வகுப்பு மாற்றத்துக்கு கட்டாய இந்தி தடையாக இராதென்றும், ஆனால் பாடத்திட்டத்தில் அது ஒரு முக்கிய பகுதியாக இருக்குமென்றும் சொல்லப்படுகிறது.

## நடராஜய்யர் சவுக்கடி

இதைக் கண்டித்தே "இந்தியன் சோஷியல் ரிபார்மர்" பத்திரிகையின் ஆசிரியர் தோழர் கெ. நடராஜய்யர் மூதன் மந்திரியாருக்குச் சவுக்கடி கொடுத்திருக்கிறார்.

அம்மட்டோ! இம்மாதிரியான கட்டாய இந்தியின் நோக்கம் என்ன என்பதையும் அறிந்து கொள்ள முடியவில்லை.

ஒவ்வொரு பையனும் இந்தி வகுப்புச் செல்ல வேண்டுமாம்! இந்தி பயில வேண்டுமாம்! பரீட்சையிலும் எழுத வேண்டுமாம்! ஆனால் இந்தி பாடத்தில் தோற்றாலும் அவன் மேல்வகுப்புக்கு அனுப்பப்படுவானாம்!

இதன் அர்த்தம் என்ன? இதில் ஏதோ சூழ்ச்சியிருக்கிறதென சந்தேகம் கொள்வது தப்பா?

பொதுவாக ஒரு விஷயத்தில் தோல்வியடையும் மாணவனும் இப்பொழுது மேல் வகுப்புக்கு அனுப்பப்படுகிறான்.

ஒரு விஷயத்தில் தோல்வியடையும் மாணவன் இந்தியிலும் தோல்வியடைந்தால் இனி அவன் மேல் வகுப்புக்கு அனுப்பப் படுவானா?

"கீழ் வகுப்பிலிருந்து மேல்வகுப்புக்கு மாற்றும் விஷயம் இந்திப் பாண்டித்யத்தைப் பொறுத்ததாயிராது; இப்பொழுது இருந்து வருவதுபோல்தாய் மொழி உட்பட இதரவிஷயங்களில் மாணவனுக்குள்ளபொதுவான பாண்டித்யத்தைப் கவனித்தே கீழ் வகுப்பிலிருந்து மேல்வகுப்புக்கு மாணவர்கள் மாற்றப்படுவார்கள்" என சர்க்கார் அறிக்கைகூறுகிறது.

ஆனால் பாண்டித்பம் என்றும் பொதுவான பாண்டித்யம் என்று கூறப்பட்டிருப்பதின் மர்மம் என்ன?

பாண்டித்யம் என்பதில் பரீட்சையில் தேறுவதைவிட வேறு எதாவது அடங்கியிருக்கிறதா?

அப்படியானால் இந்துஸ்தானி பயில்வதற்குச் செலவாகும் பணமும் சக்தியும் வீண்தானே!

இந்துஸ்தானி படிப்பதினால் வேறு பாடங்கள் படிக்கத்தடை ஏற்படாதா?

வாஸ்தவத்தில், கட்டாய இந்திக்கு இந்தி எதிர்ப்பாளர் கூறும் ஆட்சேபணைகளுக்கு முதன் மந்திரி யளித்த பேட்டியோ, சர்க்கார் அறிக்கையோ சரியான சமாதானம் சொல்லவே இல்லை.

## இந்தி எதிர்ப்பாளர் ஆட்சேபணை.

இந்தி எதிப்பாளர் ஆட்சேபணைகள் பின்வருமாறு:—

1. மொழி நமது சிந்தனை, கலை, ஐதீகம் முதலியவைகளைப் பாதிக்கக்கூடியது; ஆகவே மொழியை நாம் பெரிதும் மதிக்கிறோம். அதை எவராலும் மறுக்கமுடியாது.

கருத்தை உருப்படுத்துவது மொழியே என்பது மனோதத்துவ சாஸ்திரிகளால் சர்வ சம்மதமாக ஒப்புக் கொள்ளப் பட்டது.

இங்கிலீஷ் படிப்பதினால் நமது கருத்தும், கலையும், ஐதிகங்களும் ஏற்கனவே பாதிக்கப்பட்டிருக்கின்றன; மேலும் இந்தி படிக்கவேண்டியதாக நேர்ந்தால் நமது கருத்து, கலை, ஐதீகங்களுக்குப் பெரிதும் பாதகம் ஏற்படு மென்பது நிச்சயம்.

இங்கிலீஷ் பயிற்சியிலாவது சில நன்மைகள் இருக் கின்றன.

இங்கிலீஷ் சர்வ தேசச்செலாவணியுடைய ஒருபாஷை. பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு இருந்தா லும் இல்லாவிட்டாலும் இங்லீஷ் பயிற்சி இந்தியர்களுக்கு அதிக நன்மையளிக்கக் கூடியதாகவே இருக்கும்.

மேலும் இங்லீஷில் உயர்வான இலக்கியங்களும் கலை களும் உள்ளன.

ஹிந்துஸ்தானிக்கு இந்தப்பெருமைகள் ஏதுமே இல்லை.

பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு இருந்து வரும்வரை வயிற்றுப் பிழைப்புக்கு இங்கிலீஷ் இன்றியமை யாததாகவே இருக்கும்.

2. இந்தியா முழுமைக்கும் ஒரு பொது மொழி தேவையுமில்லை; சாத்தியமுமில்லை; இந்தியால் ஒருபயனும் ஏற்படாதாகையினால் அது தேவையில்லை. இந்தியா போன்ற ஒரு பெரிய தேசத்தில் பொது மொழி சாத்தியமு மல்ல. வலுக்கட்டாயமாக ஒரு மொழியைப் பொது மொ ழியாக்கினாலும் அது நெடுநாள் அமலில் இருக்கப் போ வதுமில்லை.

ஒரே மாகாணத்தில் வெகு காலம் உன்னத நிலைமையிலிருந்த உபரிய மொழிகளும்கூட காலக்கிரமத்தில் சிதைந்து உருமாறி அதே மாகாணத்திலுள்ள ஜில்லா மக்களுக்கும் புரியாத மொழிகளாகி விடுகின்றன.

ஐரோப்பாவிலுள்ள மைனாரட்டி சமூகங்களுக்கும் சர்வதேச சங்கத்துக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தங்களைப் பார்த்தால் மைனாரட்டி சமூகங்களின் பாஷைகளுக்குப் பெயர் பெற்ற ஐரோப்பிய ராஜ்ய தந்திரிகளான சர்வதேச சங்கமெம்பர்கள் சிறுபான்மையோரின் தாய்மொழிகளுக்கு எவ்வளவு மதிப்பு கொடுத்திருக்கிறார்கள் என்பது விளங்கும்.

இந்த ஒப்பந்தங்களிலெல்லாம் மைனாரட்டி சமூகங்களின் மொழிகளுக்குப் பாதுகாப்பளிக்கப் பட்டிருக்கிறது.

பின்லாந்து தேசத்துக்குச் சர்வதேச சங்கத்துக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தத்தில் ஒரு விசேஷ அம்சம் இருந்து வருகிறது.

அதாவது பின்லாந்துக்குச் சொந்தமான ஆலந்து தீவில் அந்தத்தீவில் வாழும் மக்கள்—மிகவும் சொற்பப் பேராயிருப்பினும்-அவர்களது சம்மதியில்லாமல் பின்லாந்து மொழியைக் கட்டாய பாடமாக்கக் கூடாதென்று ஒரு விதி சேர்க்கப்பட்டிருக்கிறது.

## காங்கரஸ் முடிவு செய்ய வில்லையே?

3. எந்த மாகாணக் கல்வித்திட்டத்திலும் இந்தியைக் கட்டாய பாடமாக்க வேண்டுமென்று காங்கரஸ் முடிவு செய்யவுமில்லை.

தேர்தலில் தாம் மெஜாரட்டி பெற்றால் இந்தியைக்

கட்டாய பாடமாக்கப்போவதாய் தேர்தல் அறிக்கையிலோ, தேர்தல் பிரசங்கங்களிலோ காங்கரஸ்காரர் குறிப்பிடவுமில்லை.

இந்தியைக் கட்டாய பாடமாக்க வேண்டுமென்று மாகாண மக்கள் எவரும் காங்கரஸ்காரரிடம் வேண்டிக்கொள்ளவுமில்லை.

அரசியல் சூதாட்டத்தில் நமது குழந்தைகளைப் பணயமாகவைக்கக் கூடாதென்பது எனது அபிப்பிராயம்.

இந்தி கட்டாய பாடத்தின் நோக்கம் அரசியல் சம்மந்தமானதேயின்றி கல்வி சம்மந்தமானதல்ல வென்பதற்கு "தேசீயப்" என்னும் சொல் சர்க்கார் அறிக்கையில் திணிக்கப்பட்டிருப்பதே ஒரு சான்று.

இது ஒரு அரசியல் சூழ்ச்சியென்பதை மந்திரிகளோ பார்லிமெண்டரி காரியதரிசிகளோ மறைக்கவுமில்லை.

5. நமது மாணவர்களின் தற்கால பாடத்திட்டமே மிகவும் பளுவானது.

அத்துடன் இந்தி கட்டாய பாடமும் சேர்க்கப் பட்டால் மாணவர்களுக்குப் பேராபத்து உண்டாவது நிச்சயம்.

நமது பையன்கள் எல்லாம் பலசாலிகளல்ல; நாட்டின் காலநிலை அவர்களது உடல் வளர்ச்சிக்கு உதவிபுரியக் கூடியதுமல்ல.

## இந்தியால் பார்ப்பனருக்குத்தான் நன்மை.

6. இந்துஸ்தானிப் பயிற்சி ஒரு குறிப்பிட்ட சமூகத்தாருக்குத்தான் நன்மையாக இருக்கும்; ஏனையோருக்கு நன்மைதரவே செய்யாது.

இந்துஸ்தானி பாடத்தேர்வில், மேல்வகுப்பு மாற்றத்துக்குத் தடையாக இராதென்பது நமது ஆட்சேபணைகளுக்கு ஒரு சமாதானமாகவே இருக்காது.

7. இரண்டு நோக்கங்களுடன் முதன் மந்திரியார் இந்தியை கட்டாய பாடமாக்கப் போவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது.

1. காங்கரஸ் தொண்டர்களாயிருந்தவர்களும், இந்திப் பிரசார சபையாரால் பயிற்சியளிக்கப் பட்டவர்களுமான ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த வாலிபர்களுக்கு இந்தி ஆசிரியர் பதவியளித்து அவர்களது வேலையில்லாத் திண்டாட்டத்தை யொழிக்க முயல்வதாகக் கூறப்படுவது முதல் குற்றச்சாட்டு.

2. மற்ற காங்கரஸ் தலைவர்கள் மற்ற மாகாணங்களில் இந்தியைக் கட்டாய பாடமாக்கப் பயந்து கொண்டிருந்தாலும் தாம் மந்திரியானால் சென்னை மாகாணத்தில் இந்தியைக் கட்டாயபாடமாக்கி விடுவதாய் வடநாட்டு நண்பர்களிடம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றிவைக்க இந்தியைக் கட்டாய பாடமாக்கப் போவதாய்க் கூறப்படுவது இரண்டாவது குற்றச்சாட்டு.

ஆகவே தாராளக் கல்விக்காக இந்தி கட்டாயபாடமாக்கப் படவில்லை யென்பதும், காங்கரஸ்தலைவர் பாபு சுபாஷ் சந்திரபோஸ் தமது மாகாணத்தில் அமலில் கொண்டுவர விரும்பாத ஒரு திட்டத்தை தாம் தமது மாகாணத்தில் அமலில் கொண்டு வந்து விட்டதாய்ப் பீத்திக் கொள்வதற்காகவே இந்தி கட்டாயப் பாடமாக்கப் படுகிறது என்பதும் வெளிப்படை.

## இந்தி கட்டாய பாடமானால்?

8. இந்தி கட்டாய பாடத்தினால் வகுப்பு சச்சரவு களும் சாதிப் பூசல்களுமே உண்டாகும்.

பார்ப்பனரல்லாதாரை ஒடுக்கும் பொருட்டு இந்தியைப் புகுத்துவதாக பகிரங்கமாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

இது ஒருகால் புனைந்துரையாக இருக்கலாம்.

ஆனால் தற்கால மந்திரி சபையார் இதுவரை செய்து வந்துள்ள காரியங்கள் அத்தகைய அச்சத்துக்குக் காரணங் களாக இருக்கின்றன.

இந்தி கட்டாய பாடத்திட்டத்தினால் அந்த அச்சம் அதிகமாகி வகுப்புப் பூசல்களும் பிளவுகளும் உண்டாவது நிச்சயம்.

அரசியல் பார்ப்பனர் தாம் ஆரியர் என்பதையும் அரசி யல் பார்ப்பனரல்லாதார் தாம் திராவிடர் என்பதையும் ஒரு பொழுதும் மறப்பதில்லை.

9. ஆங்கில ஆட்சி ஒழிந்து விட்டால் தென்னாட் டார் மீது ஆதிக்கம் செலுத்த வடநாட்டார் துடிதுடித்துக் கொண்டிருப்பது யாவரும் அறிந்த விஷயம்.

வட நாட்டாரின் அந்த விருப்பத்தை நிறைவேற்று வதற்கு இந்தி கட்டாயப் பாடம் ஒரு பூர்வாங்கவேலையே.

## முதன் மந்திரியார் கனவு.

இந்திக் கட்டாயப் பாடத்திட்டத்தைக் கைவிடும்படி எதிர்ப்பாளர் காங்கரஸ் சர்க்காரைப் பயமுறுத்தி வருவதாக முதன் மந்திரியார் கனவு காண்கிறார்.

இந்தி எதிர்ப்பாளர் பல கண்டனக் கூட்டங்கள் கூட்

டியிருப்பதும், மகாநாடுகள், ஊர்வலங்கள் நடத்தியிருப்பதும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் செய்திருப்பதும், கறுப்புக் கொடிகள் பிடித்திருப்பதும், மறியல் செய்து வருவதும் மற்றும் பல வழிகளில் இந்தி கட்டாய பாடத்தில் தமக்குள்ள வெறுப்பைக் காட்டியிருப்பதும் மெய்யே.

அவர்களில் சிலர் உண்ணாவிரதமிருக்கிறார்கள்.

ஆனால் உண்ணாவிரத மிருக்க முன் வந்தவர்கள் காங்காஸ் கோஷ்டியில் சேர்ந்தவர்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

அவர்கள் போக்கு வருந்தத் தக்கதாயினும் நேர்மையானதாகும். எல்லாத்தொல்லைகளுக்கும் உண்ணாவிரதமே ஏற்ற பரிகாரம் என அவர்களுககுக் காங்காஸ்காரர் கற்றுக்கொடுத்தபாடமே அவர்களது உண்ணா விரதத்துக்குக் காரணம்.

மற்றவிதமான எதிர்ப்பு முறைகள் எல்லாம் சட்ட பூர்வமானவைகளே.

## பூச்சாண்டி காட்டுவது காங்கரஸ் சர்க்காரே.

வாஸ்தவத்தில் இந்தி எதிர்ப்பாளரைப் பூச்சாண்டி காட்டுவது காங்காஸ் சர்க்காரே.

காங்காஸ்காரர் பதவியேற்குமுன் கையாண்ட முறைகளைப் பின்பற்றும் இந்தி எதிர்ப்பாளருக்குப் போலீசார் தடியடி வழங்கும்படி தூண்டுவதும், கண்ணியமானவர்களைக் கைது செய்வதும், காரியாலயங்களில் சோதனை போடுவதும் காங்காஸ்காரர் வெறுத்த—கண்டித்த-கிரிமினல் திருத்தச் சட்டத்தின்படி வழக்குத் தொடருவதும் மற்றும் கொடிய அடக்கு முறைகளைக் கையாளுவதும் காங்காஸ் சர்க்காரே யாகும்.

வாஸ்தவத்தில் பயமுறுத்துவது காங்காஸ் சர்க்காரே யன்றி இந்தி எதிர்ப்பாளரல்ல.

வரப்போகும் சுயராஜ்யத்துக்கு இதுதான் முற்குறியா? காங்கரஸ் மந்திரிகள் 100—க்கு 3 மாகாண சுயராஜ்யத்தின் லக்ஷணம் இதுவானால் படையும் விமானங்களும் உடைய, வரப்போகும் 100க்கு 100 பூரண சுயராஜ்யம் எவ்வளவு லக்ஷணமாயிருக்கும் என வெகு சுலுவாக ஊகித்து அறிந்து கொள்ளலாம்!

பழைய சாத்தான் சர்க்காரிலே அடக்குமுறைகளும், பயமுறுத்தலும், கொடுங்கோன்மையும் தாண்டவமாடியதாகக் குறை கூறப்பட்டது. இப்பொழுது காற்று மாறியடிக்கத் தொடங்கியிருக்கிறது.

ஊராரைக் கொள்ளையடித்துப் பேலீசார்கையில் அகப்படாமல் தப்பித்துக் கொண்டு பெரும்பணம்தேடும் குபேரனான ஒருவன் அநியாயமாகத் தான் ஈட்டிய பொருளைப் பாதுகாக்க அதிகப்படியான போலீஸ் வேண்டுமெனக் கேட்பது போல் தற்கால காங்கரஸ் சர்க்கார் போலீஸார் உதவியை நாடி தாம் முன்னர் கண்டித்த முறைகளைப் போலீசார் இந்திஎதிர்ப்பாளர் விஷயத்தில் கையாள வேண்டுமென்று தூண்டி பயமுறுத்தி வருகிறார்கள்.

## கிராம்பு மறியல் குற்றமில்லையா?

கொஞ்ச நாளைக்கு முன் தான் காங்கரஸ்காரர் கிராம்பு மறியல் செய்தார்கள்.

அவர்களில் ஒருவராவது கைது செய்யப்படவில்லை.

மறியல் செய்தவர்களுக்கு போலீசார் பாதுகாப்பளித்த

தாகவும் கூட ஒரு காங்கரஸ் அபிமானமுடைய ஞாயிறு வெளியீடு பத்திரிகை பெருமை யடித்துக்கொண்டது,

இப்பொழுது மறியல் செய்ததாகவும் மறியல் செய்யத் தூண்டியதாகவும் குற்றஞ் சாட்டப்பட்ட தோழர்கள் சி. டி. நாயகம், கே. எம். பாலசுப்பிரமணியம் உட்பட 100 பேர் களுக்குமேல் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சிறையிலிருந்தபோது மோர் வேண்டுமென்று கிளர்ச்சி செய்த காங்கரஸ்காரர் நடத்தும் சர்க்கார் சிறையிலிருக்கும் விசாரணைக் கைதிகளுக்கு ராகிக் களியும், கூழும் அளித்து வருகிறார்களாம். புகார் செய்தும் கவனிக்கப்பட வில்லையாம்.

ஆகவே காங்கரஸ் ராஜ்யத்திலே காங்கரஸ்காருக்கு ஒரு நீதி, அல்லாதவர்களுக்கு ஒரு நீதி என்பது விளங்க வில்லையா?

இக்காரியங்களெல்லாம் பாசிஸ்டு போக்குடையவை தானே?

இந்தி எதிர்ப்பு இயக்கம் மனக்குறையுடைய சில விஷமி கள் சூழ்ச்சியெனக் கூறிப் பொது ஜனங்களை ஏய்க்க கனம் ராஜகோபாலாச்சாரியார் முயல்கிறார்.

இந்தி எதிர்ப்பாளர் ஆயிரக்கணக்கானவர்களை "மனக் குறையுடைய சிலர்" என கனம் ஆச்சாரியார் அலக்ஷ்ய மாகக் கூறுவது உண்மையில் மிக வேடிக்கையாகவே இருக்கிறது.

மாகாணம் முழுதும் நடைபெற்ற ஆயிரக்கணக்கான

கண்டனக் கூட்டங்களில் பங்குகொண்ட மக்களின் மனக் கொதிப்பையும் உணர்ச்சியையும் கனம் ஆச்சாரியார் மெய்யாகவே அறியவில்லையா?

அவர் செல்லுமிடங்களில் எல்லாம்கறுப்புக்கொடிகளையும் இந்தி எதிர்ப்பு விளம்பரங்களையும் பார்க்க வில்லையா?

இந்தப் பெரிய இந்தி எதிர்ப்பு இயக்கம் சில மனக் குறையுடையவர்களின் வேலையென அலக்ஷ்யமாகக்கூறி விட்டால் பொதுஜனங்களும் அதை நம்பிவிடுவார்கள் என கனம் ஆச்சாரியார் மெய்யாகவே நம்புகிறாரா?

## வெளி மாகாணத்திலும் இந்திக்கு எதிர்ப்பு.

வெளி மாகாணங்களில் ஜனாப் ஜின்னா, "இந்தியன் சோஷியல் ரிபார்மர்" ஆசிரியர் தோழர் கெ. நடராஜய்யர், கல்கத்தா ராபிபஜார் சங்கத்தார் முதலியோர், இந்தியைக் கண்டித்திருப்பதைக் கனம் ஆச்சாரியார் அறியவில்லையா?

இவர்கள் எல்லாம் மனக் குறையுடையவர்களா?

ஸர். எம். கிருஷ்ணன் நாயர், மாஜி மந்திரி எஸ். முத்தைய முதலியார் ஸி. ஐ. இ., சாமி வேதாசலம், ஈழத்துச் சிவானந்த அடிகள், ஷண்முகானந்தசுவாமிமுதலியோர் கண்டனத்துக்கு கனம் ஆச்சாரியார் என்ன பதிலளிக்கிறார்?

தோழர் சோமசுந்தர பாரதியாரும் மனக்குறையுடையவரா?

அவர் இன்றும் ஒரு காங்கரஸ் வாதியாகத்தானே இருக்கிறார்?

சென்ற பொதுத்தேர்தலில் அவர் காங்கரஸ்காரரை ஆதரிக்கவில்லையா? காங்கிரஸ்காரருக்காகப் பிரசாரம் செய்யவில்லையா?

இந்தி எதிர்ப்புக் கூட்டங்களில் பேசுவோரில் பெரும்பாலர் காங்கரஸ் வாதிகள் தானே?

இந்தி எதிர்ப்புக் கண்டனத் தீர்மானங்களை ஏகமனதாக நிறைவேற்றிய சங்கங்களின் மெம்பர்கள் எல்லாம் மனக்குறையுடையர்களா?

இவர்களும் இந்தி எதிர்ப்புக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் எல்லாரும் மனக்குறையுடையவர்களா?

எதிரிகள் மீது வசை புராணம் பாடுவதினால் அவரது நோக்கம் நிறைவேறி விடும் என கனம் முதன் மந்திரியார் நம்புகிறாரா?

"கொடுஞ்சொல் கோழைத்தனத்தின் அறிகுறி" என்னும் பழமொழியைக் கனம் ஆச்சாரியார் அறியாரா?

வசை மொழிகளாலும், மழுப்பல்களினாலும் பொது ஜனங்களை ஏமாற்ற முடியாதென அவர் உணரவில்லையா?

## மராமத்து மந்திரியார் பிதற்றல்.

ஒரு ஆந்திரரான நான் தமிழர் இயக்கத்தை ஆதரிப்பது அக்கிரமமானதென கனம் யாக்கூப் ஹாஸன் ஒரு பொதுக் கூட்டத்திலே கூறினாராம்.

அவருடைய அறியாமைக்கு நான் மிகவும் இரங்குகிறேன்.

தமிழுக்கும், தெலுங்குக்குமுள்ள சம்மந்தத்தைக் கூட அவர் சரியாக அறியவில்லையென்றே தோற்றுகிறது.

தெலுங்கு திராவிட பாஷைகளில் ஒன்று என்பதையும், சென்னை சர்க்கார் இந்தி கட்டாய பாடத்திட்டம் ஆந்திர நாட்டையும் பாதிக்கும் என்பதையும் அவர் அறியார் போல் தோற்றுகிறது.

அவருக்குத் தெலுங்கும் தெரியாது, தெலுங்குப் பத்திரிகைகளை அவர் படிப்பதுமில்லை. எனவே அவரை நான் மன்னித்துவிட தயார்.

ஆனால் ஆந்திர நாட்டிலும் இந்தி கட்டாய பாடத்துக்கு எதிர்ப்பு இல்லாமலில்லை என்பதை அவர் அறிந்திருப்பாராக!

## ஆந்திர ரத்நம் பொன்மொழிகள்.

16 வருஷங்களுக்கு முன்—சட்டமறுப்புப்போர் தீவிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்திலேயே—"இங்கிலீஷ் ஸ்தானத்தில் இந்தி புகுத்தப்பட்டால் தென்னாட்டாராகிய நமக்குத்தான் அதிக கஷ்ட நஷ்டங்கள் உண்டாகும்.

நமது மொழியே நமது உயிர் நாடியானதினால் இந்தி மொழியினால் மேலும் பல நூற்றாண்டுகாலம் நாம் இந்தி மொழிக்கு அடிமைப்படவேண்டியதாகவே நேரும். ஒரு அந்நியமொழி மூலம் நமது மனோ உணர்ச்சிகளைச் சரியாகத் தெரிவிக்கவே முடியாது. எனவே முன்னேற்றத்துக்குத்தடையேற்படுவது நிச்சயம்" என ஆந்திர ரத்நகோபால கிருஷ்ணய்யா எச்சரிக்கை செய்திருக்கிறார்.

அவர் அகில இந்திய காங்கரஸ் கமிட்டியில் காரியதரிசி

யாயிருந்தவர் என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

ஆனால் ஜனாப் யாகூப் ஹாஸன் சமீபத்தில் காங்கரஸில் சேர்ந்தவரானதினால் இந்த விஷயங்களெல்லாம் அறிந்திருக்க மாட்டார்.

ஆந்திர பார்லிமெண்டு தலைவரான தோழர் பி. கேசவராவ் பி. எஸ். ஸி., பி. எல். சமீபத்தில் வெளியிட்ட ஒரு துண்டுப்பிரசுரத்தில் இந்தி கட்டாய பாடத்தினால் ஆந்திரர்களுக்கு நேரக்கூடிய தீமைகளை விளக்கி எச்சரிக்கையும் செய்திருக்கிறார்.

இந்திப் பிரச்சினையை முன்னிட்டுப் பொதுஜன வாக்கெடுக்கும்படி மசூலிப்பட்டணம் தோழர் எம். வி. கிருஷ்ணராவ் முதன் மந்திரியாருக்கு ஒரு சவாலும் விடுத்தார்.

இவ்வண்ணம் இந்தி கட்டாய பாடத்தைக் கண்டித்த கோபால கிருஷ்ணய்யா, கேசவராவ், எம். வி. கிருஷ்ணராவ், ஆகிய மூவரும் பிராமணரானதினால் அவர்களெல்லாம் மனக் குறையுடையவர்கள் என்றோ, காங்கரஸ் எதிரிகள் என்றோ கூறிவிடமுடியாது.

## தெலுங்குப் பத்திரிகைகள் எதிர்ப்பு.

சென்னை தெலுங்கு தினசரியான "ஜனவாணியும்" நெல்லூர் பத்திரிகையான "ஸ்வதந்தராவும்" ராஜமந்திரியிலிருந்து வெளிவரும் "பிரபுத்தபாரத்" பத்திரிகையும் இந்தி கட்டாயப் பாடத்தைக் கட்டுப் பாடாக எதிர்த்தே வருகின்றன.

ஆந்திர நாட்டில் நடைபெற்ற பல பொதுக் கூட்டங்

களிலும் இந்தி கட்டாய பாடம் கண்டிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் ஆந்திரர் ஆந்திர மாகாணப் பிரிவினை விஷய மாகக் கிளர்ச்சி செய்து வருவதினால் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் அவர்கள் இப்பொழுது அவ்வளவு கவனம் செலுத்தவில்லை.

அதனால் ஆந்திர நாட்டில் இந்திக்கு எதிர்ப்பில்லை யென ஏற்பட்டுவிடாது.

## கல்வி மந்திரி கூறியது என்ன?

"ஜனநாயக ஆட்சியில் சிலசந்தர்ப்பங்களில் பொது ஜன அபிப்பிராயத்துக்கு விட்டுக்கொடுக்க வேண்டியதாக நேரலாம்" என்ற டிசாலி கொள்கைப்படி, 1937 அக்டோ பரில்கோயம்புத்தூர் பொதுக்கூட்டத்தில் பேசுகையில்கல்வி மந்திரி கனம் டாக்டர்சுப்பராயன் "பொதுஜன அபிப்பிராயத் துக்கு முரணாக நடக்க எந்த சர்க்காருக்கும் முடியாது. ஆகவே காங்கிரஸ் சர்க்காரும் தமது கொள்கையை மாற் றிக் கொள்ள வேண்டியதுதான்" என்று கூறியுள்ளார்.

அவர் அவ்வாறுகூறியது 8 மாதங்களுக்குமுன். அது முதல் இந்தி எதிர்ப்பு படிப்படியாக வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது.

இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை தாம் லக்ஷ்யம் செய்ய வில்லையென்றும் அதனால் தமிழுக்கு ஏராளமான நன்மை யுண்டாயிருக்கிறதென்றும் தமிழை விருத்தி செய்யத் தாம் முயற்சி செய்து வருவதாயும் கனம் ஆச்சாரியார் ஒப்பொ ழிச்சால் இல்லாமல் கூறி வருகிறார்.

ஆனால் அவர்பேசிய பல கூட்டங்களில் தடியடிப்பிர

யோகமும் நடைபெற்றே இருக்கிறது.

## எதிரிகளுக்கு ஆச்சாரியார் மதிப்பு.

கிரிமினல் திருத்தச் சட்டப்படி வழக்குத் தொடரப்பட்டிருப்பது பற்றி நாம் எதுவும் கூறப் போவதில்லை.

இதுதான் கண்டனங்களை வரவேற்கும் முறையா, எதிரிகளை மதிக்கும் முறையா, எனக்கேட்கிறேன்.

தமிழ் சிறுவர்களிடம் தமக்கு அன்புண்டென்றும் கனம் ஆச்சாரியார் அடிக்கடி கூறிக்கொள்கிறார்.

ஆனால் அந்த அன்பைக் காட்டும்முறை இது,தானா?

கனம்மூஸ்லிம் மந்திரி திண்டுக்கல்லில் கூறியது போல் இந்தி எதிர்ப்பு இயக்கத்தை நசுக்க முதன்மந்திரியார்முடிவு செய்திருப்பது மெய்யா? இல்லையா?

எதிரிகளை நசுக்குவதுதான் ஆரியர் வழக்கு—அவர்கள் ஜெர்மன் ஆரியராயிருந்தாலும் சரி, இந்திய ஆரியரா யிருந்தாலும் சரி.

ஜெர்மானியிலே ஆரிய ஹிட்லர் யூதர்களை நசுக்கிவிட்டார்.

இந்தியாவிலே ஆரிய ஆச்சாரியார் தமிழரை நசுக்க முயற்சி செய்கிறார்.

பன்னூண்டு காலம் (பிராமணர் தமிழருடனும், ஜெர்மானியர் யூதர்களுடனும்) சேர்ந்து வாழ்ந்தும் ஆரியர் ஜாதி வெறியும் துவேஷமும் ஒழியவில்லையோ!

## குடி அரசு பதிப்பக ெ

XCPR:31
31

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | இந்தியாவின் குறைபாடுகள் (160 ப | | | |
| 2. | லெனினும், மதமும் | | | |
| 3. | பொதுவுடைமைத் தத்துவங்கள் | | | |
| 4. | கடவுளும், பிரபஞ்சமும் | 0 | 4 | 0 |
| 5. | உழைப்பாளிகளுக்கு ஏன் இவ்வுலகமில்லை? | 0 | 1 | 0 |
| 6. | இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம் | 0 | 4 | 0 |
| 7. | ,, அயோத்தியா காண்டம் (200 பக்கம்) | 0 | 8 | 0 |
| 8. | ,, ஆரண்ய காண்டம் | 0 | 4 | 0 |
| 9. | ,, கிட்கிந்தா காண்டம் | 0 | 4 | 0 |
| 10. | ஞானசூரியன் (நான்காம் பதிப்பு) 200 பக்கம் | 0 | 5 | 0 |
| 11. | தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம் | 0 | 3 | 0 |
| 12. | மேயோ கூற்று மெய்யா? பொய்யா? | 0 | 3 | 0 |
| 13. | பங்கஜம் அல்லது பார்ப்பனக் கொடுமை | 0 | 4 | 0 |
| 14. | ஈ. வெ. ரா. சீர்திருத்த மகாநாட்டு உபந்யாசம் | 0 | 2 | 0 |
| 15. | அகத்தியர் ஆராய்ச்சி | 0 | 2 | 0 |
| 16. | இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு | 0 | 2 | 0 |
| 17. | கதர் மூடநம்பிக்கை (இங்கிலீஷ்) | 0 | 2 | 0 |
| 18. | பர்னார்ட்ஷா உபந்யாசம் | 0 | 1 | 0 |
| 19. | சோஷியலிசம் | 0 | 2 | 0 |
| 20. | போல்ஷ்விக் முறை | 0 | 1 | 0 |
| 21. | ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம் | 0 | 0 | 6 |
| 22. | சமதர்ம உபந்யாசம் | 0 | 0 | 9 |
| 23. | சோதிட ஆராய்ச்சி | 0 | 4 | 0 |
| 24. | மனுநீதி விளக்கம் | 0 | 2 | 0 |
| 25. | மறுப்புக்கு மறுப்பு | 0 | 3 | 0 |
| 26. | பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்) | 0 | 4 | 0 |
| 27. | புது ரஷ்யா (200 பக்கம்) | 0 | 8 | 0 |
| 28. | புராண ஆராய்ச்சி தக்க ஆதாரங்களுடன் | 0 | 8 | 0 |
| 29. | காப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| 30. | ராவணப் பெரியார் | 0 | 5 | 0 |
| 31. | இங்கர்சால் பொன்மொழிகள் | 0 | 4 | 0 |
| 32. | நரகம் எங்கே? | 0 | 2 | 0 |
| 33. | ஜாதியை ஒழிக்க வழி | 0 | 4 | 0 |
| 34. | ஐக்கியாலயம் அல்லது கைவல்யம் கட்டுரை | 0 | 5 | 0 |
| 35. | ஹிந்தி எதிர்ப்புப் பாடல்கள் | 0 | 2 | |
| 36. | காரல் மார்க்ஸ் | 0 | 2 | |
| 37. | மனிதன் என்றால் என்ன? | 0 | 6 | |

கிடைக்குமிடம்:— குடி அரசு பதிப்பகம், ஈரோ